பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**29 06 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** செஷெல்ஸ் அதிபருடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**2.** கடந்த **12** ஆண்டுகளில் நாட்டின் சுகாதாரத்துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**3.** பாகிஸ்தானின் கராச்சியில் அண்மையில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதல் சம்பவங்கள் குறித்து அந்நாட்டு அரசு தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளை இந்தியா நிராகரித்துள்ளது.

**4.** மாம்பழ விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் மத்திய அரசு நிவாரண உதவி வழங்க வேண்டும் என்று ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

**5.** சிக்கிம் மற்றும் மேற்குவங்க மாநிலங்களில் ஓரிரு இடங்களில் இன்று அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - செஷெல்ஸ் இடையே, பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து அந்நாட்டு அதிபருடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விக்டோரியாவில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி, இந்தப் பேச்சுவார்த்தையின்போது, சுகாதாரம், கல்வி, திறன் மேம்பாடு, டிஜிட்டல் மாற்றம், நீடித்த வளர்ச்சி, சமூக உள்கட்டமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது என இரு நாடுகளின் தலைவர்களும் ஒப்புக் கொண்டதாக கூறினார்.

இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில், சட்டவிரோதமாக மீன்பிடித்தல், போதைப்பொருள் கடத்தல் உட்பட பல்வேறு சவால்கள் குறித்தும், பிராந்திய மற்றும் சர்வதேச அளவிலான விவகாரங்கள் குறித்தும் இரு தலைவர்களும் பரஸ்பரம் தங்களது கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாக அவர் தெரிவித்தார்.

செஷெல்ஸ் நாட்டில் இந்தியாவால் அறிவிக்கப்பட்டுள்ள சமூக - பொருளாதாரத் திட்டங்களின் செயலாக்கம் குறித்தும் இரு தலைவர்களும் திருப்தி தெரிவித்துள்ளதாக அவர் கூறினார்.

இவ்விரு நாடுகளிடையே தூதரக ரீதியிலான உறவுகள் ஏற்பட்டு 50 ஆண்டுகள் நிறைவைக் குறிக்கும் வகையிலான இலச்சினையை, இரு தலைவர்களும் இணைந்து வெளியிட்டதாக திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

பின்னர், திறன் மேம்பாடு, யுபிஐ, சுகாதாரம், விவசாயம், கப்பல் போக்குவரத்து, விண்வெளி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

மேலும், அந்நாட்டின் வலேச்சிக்கு உதவிடும் வகையில், உணவுப் பாதுகாப்பு, உள்கட்டமைப்பு, சுகாதாரம், தொழிற் பயிற்சி, கடல்சார் பாதுகாப்பு போன்ற துறைகளில் பல்வேறு அறிவிப்புகளும் வெளியிடப்பட்டன.

இதனிடையே செஷல்ஸ் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் திரு பெர்னார்ட் ஜார்ஜஸ்-ஐ பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின்போது செஷல்ஸ்-ஐரோப்பிய ஒன்றியம் இடையேயான ஒத்துழைப்பு தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து, தாம் அவருடன் விரிவாக விவாதித்தாக பிரதமர் கூறியுள்ளார்.

<<<<>>>>

கடந்த 12 ஆண்டுகளில் நாட்டின் சுகாதாரத்துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் காந்திநகரில் பிரதமரின் குடும்ப பராமரிப்பு கண்காணிப்புக்கான இணையதள சேவையை தொடங்கி வைத்துப் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளத்தின் மூலம் பயனாளிகள் சுகாதாரம், ஊட்டச்சத்து உள்ளிட்ட முக்கிய தகவல்கள் குறித்து அறிந்துகொள்ள உதவிடும் என்று கூறினார்.

திட்டங்களை வகுப்பதுடன் அவை அனைத்தும் மக்களை சென்றடையச் செய்வதற்கான முயற்சிகளையும் மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக திரு. அமித் ஷா தெரிவித்தார்.

தடுப்பூசி, ஊட்டச்சத்து குறைபாடு, பள்ளிகளில் சேர்க்கை விகிதம், இடைநிற்றல் விகிதம் உள்ளிட்ட தகவல்களை கண்காணிக்கும்

வகையில் பல்வேறு அரசுத்துறை சார்ந்த தரவுகளுடன் இந்த இணையதளம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

புலிகள் பாதுகாப்பு நடவடிக்கைகள் பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு உதவிடும் என்று மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் **Alwar**-ல் புலிகள் பாதுகாப்பு தொடர்பான தேசிய பயிலரங்கை தொடங்கி வைத்துப் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

புலிகள் பாதுகாப்புத் திட்டம், வனவிலங்கு பாதுகாப்பில் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கை என்று அவர் குறிப்பிட்டார்.

வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள், காடுகள், நீர்நிலைகளின் பாதுகாப்பிற்கும், பல்லுயிர்ப் பெருக்கத்திற்கும் உதவிடும் என்று திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்தார்.

<<<<>>>>

பாகிஸ்தானின் கராச்சியில் அண்மையில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதல் சம்பவங்கள் குறித்து அந்நாட்டு அரசு தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளை இந்தியா நிராகரித்துள்ளது.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியா மீதான இத்தகைய குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை என்று குறிப்பிட்டுள்ளார்.

பிற நாடுகள் மீது குற்றம் சாட்டுவதை தவிர்த்து அந்நாட்டில் செயல்பட்டு வரும் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தோத்தாபுரி மாம்பழ விவசாயிகள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் மத்திய அரசு அவர்களுக்கு நிதியுதவி வழங்க வேண்டும் என்று ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹானுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், மாம்பழத்திற்கான விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் 281 கோடி ரூபாய் நிதி உதவியை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மாம்பழச் சாறு ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாகவும், மாம்பழச்சாறு உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் அதன் கொள்முதலைக் குறைத்துள்ளதன் காரணமாகவும் இந்த விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தோத்தாபுரி மாம்பழ விவசாயிகள் குறிப்பாக ராயலசீமா பகுதியை சேர்ந்த விவசாயிகளுக்கு மத்திய அரசின் நிவாரண உதவி அத்தியாவசிய தேவையாக உள்ளது என்று முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய சுகாதார கவுன்சில் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பச்சிளம் குழந்தைகள் சுகாதார பராமரிப்பு தொடர்பான மாநாட்டை மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இது தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பச்சிளம் குழந்தைகளின் பாதுகாப்பான வளர்ச்சி குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து, மூளை செயல்பாட்டுத் திறன் ஆகியவற்றுக்கு முதல் 3 வருடங்கள் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை கருத்தில் கொண்டு இந்த மாநாடு நடைபெற உள்ளதாக சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது.

நகர்ப்புறங்களில் வசித்து வரும் புலம்பெயர்ந்த மற்றும் விளிம்பு நிலை மக்கள் குழந்தை பராமரிப்பில் எதிர்கொண்டு வரும் சிக்கல்களுக்கு தீர்வு காண்பதற்கும் இந்த மாநாடு உதவிடும் என்று சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

சுயசார்பு இந்தியா திட்டத்தின்கீழ் பாதுகாப்புத்துறை வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியாவின் முதலாவது C-295 விமானம் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தனது மன் கி பாத் உரையில் குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து நீண்டதூர ஏவுகணை சோதனைகளை வெற்றிகரமாக நடத்தி சாதனை படைத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

சிக்கிம் மற்றும் மேற்குவங்க மாநிலங்களில் ஓரிரு இடங்களில் இன்று அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சத்தீஸ்கட், கர்நாடகா, ஜார்கண்ட், மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், தெலங்கானா, கோவா உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஒருசில பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

பிஹார், ஆந்திரப்பிரதேசம், ராஜஸ்தான், ஒடிசா, லட்சத்தீவு உள்ளிட்ட பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் தில்லி, ஹரியானா மற்றும் சண்டிகரில் இன்று கடும் வெப்ப அலை வீசக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே அருணாச்சாரப்பிரதேசத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக அசாமில் உள்ள டெமாஜி நதியில் வெள்ளப்பெருக்ஏ ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதன் காரணமாக ஜோனை, **Simen, Chapori, Dimov** உள்ளிட்ட பல்வேறு ஆறுகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வருவதையடுத்து நிலைமையை அரசு உன்னிப்பாக கவனித்து வருவதாக அம்மாநில முதலமைச்சர் டாக்டர் ஹிமந்த பிஸ்வா சர்மா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

லண்டனில் நடைபெற்று வரும் ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் பெனால்டி சூட்-அவுட் முறையில் இந்தியா **3-2** என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை வென்றது.

---------------

இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் கேப்டன் **Ben Stokes** சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

**Trend Bridge**-ல் நடைபெற்று வரும் நியூஸிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியுடன் தாம் ஓய்வு பெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த **2011**-ம் ஆண்டு ஆல் ரவுண்டராக இங்கிலாந்து அணியில் இணைந்த அவர் இதுவரை, டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் **7,000** ரன்களையும், **250**-க்கும் அதிக விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்காக அவர் **121** டெஸ்ட் கிரிக்கேட் போட்டியிலும், **114** ஒருநாள் போட்டிகளிலும், **43** டுவென்ட்டி - டுவென்ட்டி போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

**<<<<The End>>>>**